மலர் : 10 மாசி இதழ் : 10

சிறுவர் மாத இதழ்

# வெற்றிமணி



அமரர் கு.வி. செல்லத்துரை அவர்கள்

கௌரவ ஆசிரியர் :

குரும்பசிட்டி மு. க. சுப்பிரமணியம்

1-2-73 விலை சதம் 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

## ஆலோசகர் குழு

இரசிகமணி கனக. செந்திநாதன்

வி. கந்தவனம் B. A.

ஏ. ரி. பொன்னுத்துரை B. A.

காரை. செ. சுந்தரம்பிள்ளை

—※—

கடந்த பத்து ஆண்டுகளாக
வெளிவரும்
ஈழத்துச் சிறுவர் மாதப்
பத்திரிகை.

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா | 75-00 |
| உள் அட்டை | ரூபா | 60-00 |
| முதற் பக்கம் | ரூபா | 50-00 |
| உட் பக்கம் | ரூபா | 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின்
15 வீதக் கழிவுண்டு.

விபரங்களுக்கு எமக்கு எழுதுக.

## வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற் செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 5-00 |
| இந்தியா | ரூபா | 6-00 |
| மலாயா | $ | 5-00 |


வெற்றிமணி

253 1/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இலங்கை)



— வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவேவிண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

மலர் 10 | 1-2-73 வியாழக்கிழமை | இதழ் 10


# 'ஞானசுரபி' திரு. கு. வி. செல்லத்துரை

கு. வி. என்ற இரு எழுத்துக்களும் ஆசிரிய உலகில் திரு. கு. வி. செல்லத்துரை அவர்களையே குறிக்கும். அவ்வளவு தூரம் அவர் ஆசிரியர்கள் உள்ளத்தில் ஆழமாக இடம்பெற்றவர். ஐம்பத்தாறு வயதில் அண்மையில் காலமான அவர் பல ஆசிரியர்களை உருவாக்கியவர். வேலையற்ற பலருக்கு ஆசிரிய உத்தியோகம் பெற்றுக்கொடுத்த பெருந்தகையாளர். சிறந்த ஆசிரியர் மாத்திரமன்று. அவர் ஒரு நூலாசிரியர், பேச்சாளர், சிறந்த பண்பாளர், சமூகத் தொண்டர்.

கண்டியில் தனது ஆசிரிய சேவையை ஆரம்பித்தஇவர் பின்னர் கொழும்பு விவேகாநந்த வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றினர். அவரது காலத்தில்தான் விவேகாநந்த வித்தியாலயம் வளர்ச்சிபெறத் தொடங்கியது எனலாம். பத்து ஆண்டுகள்வரை விவேகாநந்த வித்தியாலயத்தில் சேவைசெய்த பின்னர் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையேற்றார். அங்கே அவரது அயராத முயற்சியால் விஞ்ஞான கூடம் அமைப்பித்தார். இறுதியாகத் தான் பிறந்த இடமாகிய புங்குடுதீவு மகா வித்தியாலயத்துக்கு அதிபராகச் சென்றார். இவ் வித்தியாலய மாணவர்கள் குடிப்பதற்குத் தண்ணீரின்றிக் கஷ்டப்படுவதை யறிந்த இவர் குழாய்த் தண்ணீர் வசதியை ஏற்படுத்தினர்.

ஆசிரிய உலகுக்குத் திரு. கு. வி. செல்லத்துரை அவர்கள் செய்த சேவை அளப்பரியது. அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராக இருந்து அதைக் கட்டி எழுப்பினர். ஓய்வுபெற்ற பின் யாழ்ப்பாணத்தில் 'ஞான சுரபி புத்தகக் கம்பனி' என்ற நிறுவனத்தை நடாத்திவந்தார். 1948 ஆம் ஆண்டு கண்டியில் யான் சேவை செய்தபொழுது இவருடன் பழகத் தொடங்கினேன். எனது நெருங்கிய நண்பர்களில் திரு. கு. வியும் ஒருவர். என்னைக் காணும்போதெல்லாம் "எப்படி மணியம்" என அன்பாகக் கேட்பார்.

இவர் நீண்டகாலம் இருக்கவில்லையே என்று ஏங்கும் திருமதி செல்லத்துரை, அவரது ஒரேயொரு மகன், சுற்றத்தவர், நண்பர்கள் இவர்களுக்கு யாரால் ஆறுதல் கூறமுடியும்?

இவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக. — ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழையும் புலவரும்

பண்டிதர் இ. நமசிவாயம்

தாழை கடற்கரைத் தாவரங்களில் ஒன்று. அதன் பூவிலுள்ள மகரந்தம் வெண்மையானது. அதனுற்போலும் அது சோறு என்று புலவர்களால் சொல்லப்படுகிறது. காடுசார்ந்த இடத்திலும் தாழையின் ஒரு சாதி காணப் படுகிறது. அதன் மகரந்தமும் அங்ஙனே சோறு என்றே சொல்லப்படுகிறது. சோறு என்ற சொல் இங்ஙனம் தாழை மகரந்தத்துக்கும் உணவுக்கும் எழுத் தொப்புமையால் பொதுச் சொல்லாதல்பற்றிப் புலவர்கள் தாழை குறித் துச் சொல்லவந்த இடங்களில் 'சோறு' என்பதை உணவு என்று கொள்ளும்படி வருணனைகள் செய்திருக்கின்றார்கள். குற்றாலக் குறவஞ்சியில் ''தாழை சோறிட வாழை குருத் திடும்'' என்று வருணனை செய்யப்பட்டிருக்கிறது. சேக் கிழார் சுவாமிகளும் திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணத்து முப்பத்தாறாஞ் செய்யுளில் ''சுரும்புண்ணக் கழிக்கரைப் பொதி சோறவிழ்ப்பன மடற் கைதை'' (கைதை - தாழை) என்று வருணித்திருக்கிறார்கள்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பெருந்துறை நாடிச் சென்ற வழிக்கரையில் நின்ற தாழைகளை யமைத்து வரு ணனை செய்யவந்த கடவுண்மாமுனி,

''பேறறிந்து தவமுயல்வோம் என்று பெருந்துறை நாடி
ஆறியங்கி இளைக்குமவர்க் களிக்கவெதிர் நிற்பவர்போல்
கூறுமின்ப நிழல்செய்து குறையாத பக்தியுடன்
நீறணிந்து சோறேந்தி நின்றன வால்நெடுங் கைதை''

என்று வருணிக்கின்றார். வழிச்சென்று இளைக்கின்ற மாணிக்க வாசக சுவாமிகளுக்கு உணவு கொடுக்க எதிரே காத்து நிற்பவர்கள்போல குறைவற்ற அன்போடு நல்ல நிழல் செய்தும், விபூதி அணிந்தும், சோற்றினை ஏந்தியும் தாழை கள் நின்றன என்பது அவரது வருணனை. இத் தாழை கள் அன்னதானத்தின் சிறப்பை நன்கறிந்தன. தக்கவர் களுக்கே கொடுக்கின்ற தன்மைவாய்ந்தன. தவம் செய் வோம் என்று செய்கின்ற தக்கவர்க்கு, வழிச்சென்று இளைக் கின்ற தக்க சமயத்தில் தகுதியான முறையில் கொடுக்க எண்ணுகின்றன. தூரத்தே நின்று அழையாது, எதிர்நிற் கின்றன. விருந்து செய்வோருக்கு இன்றியமையாது வேண் டப்படுகின்ற நிறைந்த அன்பு இவைகளிடத்திலே காணப்



படுகிறது. சிவனடியார்க்கு உணவு அளித்தற்கேற்ற தகுதி யும் இவைகளிடத்திலே காணப்படுகின்றது. நீறணிந்திருக் கின்றன. அன்னதானஞ் செய்வார் உண்பவர் இளைப்பாறப் பந்தரிட்டு நிழல்செய்வது வழக்கம். இவையும் புகழ்ந்து பேசத்தக்க இன்பந்தருகின்ற நிழல் செய்கின்றன. உண வைக் கீழே தூங்க வைத்திராது மேலேந்தி வைத்திருக் கின்ற நல்ல ஆசாரமுமுடையன. கொடுத்தலில் சோம் பல்தோன்றக் கீழே இராது உற்சாகத்தோடு ஆயத்தமாக நிற்கின்றன. ஆதலால் இவை வாலுள்ள தாழைகள். வால், திருவள்ளுவர் கூறிய வாலறிவில் காணப்படும் வால். அதுதான் மெய்யறிவு. ஆகையால் இவை அளக்கலாகாப் பெருமையுடைய தாழைகள். நெடுங் கைதைகள்.

இங்ஙனம் தாழை வருணனை செய்த ஆசிரியர், பத்தி என்ற சொல்லுக்கு நிரை அன்பு என்ற பொருள்கள் இருந்த தால் தாழைகள் நிரையில் நிற்றலை யன்போடு நிற்றலா கக் கொண்ட சிலேடைப் பொருத்தமும் தாழைகளின் புறத்தில் சாம்பல்போல வெண்மை பூத்திருத்தலால் அதை நீறணிந்ததாகக் கொண்ட உவமைப் பொருத்தமும் எண்ணி மகிழ்தற்குரியன.

இனித் திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவர் வருணனையில் தாழை இடம்பெற்றவாற்றையும் நோக்குவோம்.

''ஆறு,சூழ் கழி,ப்புலால் பொறு,தசைந்து கடன்கைதை
சோறு கால்வன ஆம்பல்வாய் திறப்பன துணிந்து
கூறு வாரெனக் குவளைகள் காட்டிடக் கூடித்
தூறு வாரெனச் சிரித்தவர் தூற்றுவ முல்லை''

என்பது செய்யுள். இதில் ஆற்றைச் சூழ்ந்திருக்கின்ற கழி நிலத்திலிருந்து வீசும் புலால் நாற்றத்தைத் தாங்கமாட் டாமல் அசைந்து கூனுதலுடைய தாழையானவை சோற் றைக் கக்குவன. அதைக்கண்டு அருவருப்புக்கொண்டு தாமும் சோறுகக்க ஆம்பல்கள் வாயைத் திறப்பன. அவற்றைக் கண்டு தாழை ஆம்பல்களைத் துணிவோடு குறிப்பால் இகழ்ந்து கூறுவார் போன்று குவளைகள் கண் காட்ட தம்மில் கூடித் தூற்றிப் பேசுவார்போன்று சிரித் துப் பழிமொழிகளைப் பலரறிய முல்லைகள் சொல்வன என வருணனை செய்யப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ ஒழுக்கமுடைய தாழைக்குப் புலால் நாற்றம் தாங்க இயலவில்லை. உண்ட சோற்றை அருவருத்து வெளியே கக்குகிறது. ஒருவர் சத்திக்கும்போது கண்டவர்க்கும் சத்தி எடுக்க வருவது இயல்பு. ஆதலால் அதனைக்கண்ட ஆம்பலும் சத்திக்க வாயைத் திறக்கிறது. இவ்விரண்டினிடைய செயலையும் கண்டு, எந்நாளும் புலால் நாற்றத்தில் நிற்கும் தாழைக்கு இருந்தாற்போலிருந்து இன்று ஒரு சத்தி வருகிறது. அதைக்கண்டு ஆம்பலும் அருவருக்கிறது. இது என்ன மகாசாலம் என்று துணிந்து இகழ்ந்துகூற எண்ணியும் அச்சத்தால் அங்ஙனம் கூறாது குறிபபால் இகழ்ந்து கூறுபவர்போலக் குவளை கண்ணுற் குறிப்புக்காட்டுகிறது. இதனைக்கண்ட முல்லை, தன்னினத்தோடு சேர்ந்து அச்சமின்றித் தூற்றுபவர்கள் போலச் சிரித்து, தாழை ஆம்பல்கள்பற்றிய இகழ்ச்சி மொழிகளைப் பலத்துச் சொல்கிறது என்று விரிந்து நோக்கும்போது இவ் வருணனையில் ஒருவிதகாரண காரியத் தொடர்பு தெரிகிறது.

மேலும் சத்திக்கிறவர்கள் இடம்விட்டுப பெயர்ந்து கூனிநிற்பர். தாழையும் காற்றால் அசைகிறது. இயல்பாகவே வளைந்திருக்கிறது. அதனினின்று சோறும் விழுகிறது. செவ்வாம்பல் மலர் வாய் போன்றது. அம்மலர் விரிவது வாய் திறப்பதுபோல இருக்கிறது. குவளை கண் போன்றது. அதன் இதழசைவு கண்காட்டுவதுபோல இருக்கிறது. துணிந்து கூறுவோர் கூடிச் சிரித்துப் பழிமொழிகளை (அலர்-பழி மொழி) பலரறியச் சொல்லுவார்கள். (தூறுதல்-பழி மொழிகளைப் பலரறியச் சொல்லல்) முல்லையும் சிரிக்கிறது. (சிரித்தல்-விரிதல்) பழிமொழிகளை (அலர்-பூ) பலரறியச் சொல்லுகிறது. (தூற்றுதல்-பூக்களை உதிர்த்தல்) என்றும் விரித்து நோக்குக. தூறுதல்-சிரித்தல்-அலர் என்பன சிலேடையாக இவ்விரண்டு பொருளில் வந்தன. 'சிரித்த பங்கயம் ஒத்த செங்கண்' என இராமாயணத்தில் சிரித்தல் விரிதல் என்ற பொருளில் வந்தது. காலுதல் என்ற சொல் நன்மக்களிடையே மறைத்துச் சொல்லப்படும் (இடக்கரடக்கல்) மொழியாயினும் இங்கே அணிகுறித்து வந்ததால் குற்றமின்று.

இவ்வருணனையில் தாழை பிரதான ஒரு அங்கமாய் நின்று அழகு செய்தவாறு காண்க.


## வெற்றிமணி வெளியீடு

மாணவருக்கு
ஓர்
அரிய
நூல்

**பரீட்சையிற்
சித்தியடைவது
எப்படி?**

பரீட்சைக்குப் படிப்பதும்
பரீட்சை எழுதுவதும்
ஒரு
கலை

இந்தக் கலையைப்
பரீட்சை எடுக்கும்
ஒவ்வொரு மாணவரும்
அறிந்திருத்தல் அவசியம்.

**இன்றே வாங்கிப் படியுங்கள்**

**பரீட்சையிற்
சித்தியடைவது
எப்படி?**

அனுபவம்வாய்ந்த ஆசிரியர்
**திரு. வி. கந்தவனம், B. A. அவர்கள்**
எழுதியது.

ஏக விற்பனையாளர்கள்:
**ச. கிருஷ்ணசாமி**
33, பெரியகடை' — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலய
## வளர்ச்சி நிதிக்காக

9-3-73, 10-3-73 ஆகிய தினங்களில் ஷ வித்தியாலயத்தில்

பரத சூடாமணி அடையாறு கே. இலட்சுமணன் அவர்களின்

மாணவிகளான




செல்வி பத்மினி சின்னத்துரை

செல்விகள் பத்மினி சின்னத்துரை, சாரதா விஜயகரர்சா ஆகியோரின்

பலதரப்பட்ட நடன நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## அனைவரும் வந்து நிகழ்ச்சிகளைக் கண்டு
## ஆதரிக்குமாறு வேண்டுகிறோம்.



செல்வி சாரதா விஜயகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிமணி மாணவர் மன்றம்

மாணவர் மன்றத்தில் 22 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். பாடசாலையிற் படிப்பவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றிச் சேரலாம். விண்ணப்பத்துடன் 50சத முத்திரை அல்லது போஸ்ரல் ஆடர் பிரவேசக் கட்டணமாக அனுப்பவேண்டும்.

### அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம்

**அன்புள்ள மணி மாமாவுக்கு,**

மாணவர் மன்றத்தில் என்னை அங்கத்தவராகச் சேர்க்கவும்.

செல்வன் / செல்வி ..............................

பாடசாலை முகவரி ..............................

வீட்டு முகவரி ..............................

பிறந்த திகதி .................. வயது .................. வகுப்பு ..................

கடிதத்தொடர்பு ஆண், பெண் இருபாலாரும்.

.............................. ..............................

ஆசிரியர் / பெற்றூர் கையொப்பம் கையொப்பம்

## பேனு நண்பர் சங்கம்

உலகத்தின் பலபாகங்களிலு முள்ளவர்களைக் கடிதமூலம் அறிந்துகொள்ளவும், ஒருவர் கஷ்டத்தை மற்றவரிடம் கூறி ஆறுதல் கொள்ளவும், நல்லவர் உறவைப் பெறவும், தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இச்சங்கம் உதவியாக இருக்கும்.

1. சங்கத்தில் சேர 50சத முத்திரை / போஸ்ரல் ஆடர் அனுப்புக.
2. பெயர், முகவரி, வயது இவற்றைவிட அறிந்த பாஷைகள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், மற்றும் திறமைகள் ஆண், பெண் இருபாலாரும் கடிதம் எழுதலாமா என்ற விபரங்களை 25 சொற்களுக்கு மேற்படாது எழுதி அனுப்பவும்.
3. தோழர் தோழர்களுக்கும், தோழியர் தோழியர்களுக்குமே எழுதலாம். ஆனல் இருபாலாரும் எழுதலாம் எனக் குறிப்பிடின் எவரும் எழுதலாம்.
4. வயதுக் கட்டுப்பாடின்றி உலகத்தின் எப்பகுதியிலுள்ளவரும் சேரலாம்.
5. தங்கள் புகைப்படங்களை இப்பகுதியில் வெளியிட விரும்புகிறவர்கள் புளக் (Block) அனுப்பவேண்டும். புளக் இல்லாவிடில் புளக்செய்ய புகைப்படத்துடன் ரூ. 7-50 அனுப்பவேண்டும்.

**வெற்றிமணி, 253/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

# பங்குடைமை அறிமுகம் (15)

வை. சி. சிவஞானம்

மூன்ருவது முறை

காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்தப்படுந் தொகை காப்புறுதிக் கட்டணத்தின் Dr. (        ) பக்கத்திலும் காசு அல்லது வங்கிக் கணக்கின் Cr. (        ) பக்கத்திலும் பதியப்படும். காப்புறுதிக் கட்டணத்தின் ஒப்படைப்புப் பெறுமான வீதம் காப்புறுதிப் பத்திரக் கணக்கின் Dr. (        ) பக்கத்திலும் காப்புறுதிக் கட்டணக் கணக்கின் Cr. (        ) பக்கத்திலும் பதியப்படும். காப்புறுதிக் கட்டணத்தின் மீதித் தொகை இலாப நட்டக் கணக்குக்குக் கொண்டுசெல்லப்படும்.

காப்புறுதித் தொகை தரப்படும்போது காசு அல்லது வங்கிக் கணக்கின் Dr. (        ) பக்கத்திலும் காப்புறுதிப் பத்திரக் கணக்கின் Cr. (        ) பக்கத்திலும் பதியப்படும். காப்புறுதிப் பத்திரக் கணக்கின் Cr. (        ) பாக வித்தியாசத் தொகை இலாப நட்டத்தைப் பிரிக்கும் வீதத்தில் பிரித்து பங்காளர் மூலதனக் கணக்குக்கு மாற்றப்படும்.

**உதாரணக் கணக்கு**

மேற்படி உதாரணக் கணக்கில் காப்புறுதிக் கட்டணத்தின் ஒப்படைப்புப் பெறுமானம் 80 வீதமெனக் கொண்டு செய்க.

**உதாரண விளக்கம் (31)**

காப்புறுதிக் கட்டணக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசால் | 1000 | காப்புறுதிப் பத்திரக் க/கு | 800 |
| 1 ஆம் வருடம் | | (ஒப்படைப்புப் பெறுமானம்) | |
| | | இலாப நட்டக் கணக்கு | 200 |
| | 1000 | | 1000 |
| காசால் | 1000 | காப்புறுதிப் பத்திரக் க/கு | 800 |
| 2ஆம் வருடம் | | (ஒப்படைப்புப் பெறுமானம்) | |
| | | இலாப நட்டக் கணக்கு | 200 |
| | 1000 | | 1000 |
| காசால் | 1000 | காப்புறுதிப் பத்திரக் க/கு | 800 |
| 3ஆம் வருடம் | | (ஒப்படைப்புப் பெறுமானம்) | |
| | | இலாப நட்டக் கணக்கு | 200 |
| | 1000 | | 1000 |
| காசால் | 1000 | காப்புறுதிப் பத்திரக் க/கு | 800 |
| 4ஆம் வருடம் | | (ஒப்படைப்புப் பெறுமானம்) | |
| | | இலாப நட்டக் கணக்கு | 200 |
| | 1000 | | 1000 |
| காசால் | 1000 | காப்புறுதிப் பத்திரக் க/கு | 800 |
| 5ஆம் வருடம் | | (ஒப்படைப்புப் பெறுமானம்) | |
| | | இலாப நட்டக் கணக்கு | 200 |
| | 1000 | | 1000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காப்புறுதிப் பத்திரக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் வருடம் | 800 | காசு | 10000 |
| 2ஆம் வருடம் | 800 | | |
| 3ஆம் வருடம் | 800 | | |
| 4ஆம் வருடம் | 800 | | |
| 5ஆம் வருடம் | 800 | | |
| A மூலதனம் | 2400 | | |
| B மூலதனம் | 2400 | | |
| C மூலதனம் | 1200 | | |
| | 10000 | | 10000 |

பெறப்பட்ட காப்புறுதித் தொகை = 10000

காப்புறுதிப் பத்திர ஒப்படைப்புப் பெறுமானம் = 4000

வித்தியாசம் = 10000 − 4000 = 6000

Aயின்பங்கு $= 6000 \times \frac{2}{5} = 2400$

Bயின் பங்கு $= 6000 \times \frac{2}{5} = 2400$

Cயின் பங்கு $= 6000 \times \frac{1}{5} = 1200$

### பங்காளர் மூலதனக் கணக்கு

| | A | B | C | | A | B | C |
|---|---|---|---|---|---|---|---|
| மீதி | 42400 | 42400 | 21200 | மீதி | 40000 | 40000 | 20000 |
| | | | | காப்புறுதி | 2400 | 2400 | 1200 |
| | 42400 | 42400 | 21200 | | 42400 | 42400 | 21200 |

**நான்காவது முறை**

இம்முறைப்படி செலுத்தப்படும் காப்புறுதிக் கட்டணத் தொகை காப்புறுதிக் கட்டணக் கணக்கின் Dr. ( ) பக்கத்திலும் காசுக் கணக்கின் Cr. ( ) பக்கத்திலும் பதியப்படும். அதே நேரத்தில் அத் தொகைகள் காப்புறுதிப் பத்திரக் கணக்கின் Dr. ( ) பக்கத்திலும் காப்புறுதிப் பத்திர நிதிக் கணக்கின் Cr. ( ) பக்கத்திலும் பதியப்படும்.

காப்புறுதித் தொகையைப் பணமாகப் பெறும்போது காசு அல்லது வங்கிக் கணக்கின் Dr. ( ) பக்கத்திலும் காப்புறுதிப் பத்திரக் கணக்கின் Cr. ( ) பக்கத்திலும் பதியப்படும். காப்புறுதிப் பத்திரக் கணக்கின் மீதித்தொகை காப்புறுதிப் பத்திர நிதிக் கணக்குக்கு மாற்றப்படும். காப்புறுதிப் பத்திர நிதிக் கணக்கி



லுள்ள தொகை இலாப நட்டத்தைப் பிரிக்கும் வீதத்தில் பங்காளர் மூலதனக் கணக்குகளுக்கு மாற்றப்படும்.

**உதாரண விளக்கம் 32**

### காப்புறுதிக் கட்டணக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசால் | 1000 | இ. ந. கணக்கு | 1000 |
| | 1000 | | 1000 |
| காசால் | 1000 | இ. ந. கணக்கு | 1000 |
| | 1000 | | 1000 |
| காசால் | 1000 | இ. ந. கணக்கு | 1000 |
| | 1000 | | 1000 |
| காசால் | 1000 | இ. ந. கணக்கு | 1000 |
| | 1000 | | 1000 |
| காசால் | 1000 | இ. ந. கணக்கு | 1000 |
| | 1000 | | 1000 |

### காப்புறுதிப் பத்திரக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் வருடம் | 1000 | காசால் | 10000 |
| 2ஆம் வருடம் | 1000 | | |
| 3ஆம் வருடம் | 1000 | | |
| 4ஆம் வருடம் | 1000 | | |
| 5ஆம் வருடம் | 1000 | | |
| இலாபம் | 5000 | | |
| | 10000 | | 10000 |

### காப்புறுதிப் பத்திர நிதிக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| A மூலதனக் கணக்கு | 4000 | 1ஆம் வருடம் | 1000 |
| B மூலதனக் கணக்கு | 4000 | 2ஆம் வருடம் | 1000 |
| C மூலதனக் கணக்கு | 2000 | 3ஆம் வருடம் | 1000 |
| | | 4ஆம் வருடம் | 1000 |
| | | 5ஆம் வருடம் | 1000 |
| | | காப்புறுதிப்பத்திர இலா. | 5000 |
| | 10000 | | 10000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புறுதித் தொகை = 10000

A பங்கு $= 10000 \times \frac{2}{5} = 4000$

B பங்கு $= 10000 \times \frac{2}{5} = 4000$

C பங்கு $= 10000 \times \frac{1}{5} = 2000$

பங்காளர் மூலதனக் கணக்கு

| | A | B | C | | A | B | C |
|---|---|---|---|---|---|---|---|
| மீதி | 44000 | 44000 | 22000 | மீதி | 40000 | 40000 | 20000 |
| | | | | காப்புறுதி தொகை | 4000 | 4000 | 2000 |
| | 44000 | 44000 | 22000 | | 44000 | 44000 | 22000 |

உதாரண விளக்கம்

வேணு, பாலு, இராமு என்போர் இலாப நட்டத்தை முறையே 3; 2; 1 என்ற ரீதியில் பங்கிடும் பங்காளர். 1-5-72ஆம் திகதி வேணு இறந்துவிட்டார். வேணுவின் மூலதனம் 15000. மூலதன வட்டி 5%. 1-1-67ஆம் திகதி 12000 ரூபாவுக்கு பங்காளர் ஆயுள் மீது கூட்டுக் காப்புறுதி செய்யப்பட்டது. ஆண்டொன்றுக்குக் காப்புறுதிக் கட்டணம் 1000 ரூபா. காப்புறுதிப் பத்திரத்தின் ஒப்படைப்புப் பெறுமானம் 80%. 1-1-72ஆம் திகதி தொடக்கம் 30-4-72ஆம் திகதிவரையிலுள்ள தேறிய இலாபம் 2400 ரூபா. வேணு எடுத்த தொகை 1500 ரூபா. நன்மதிப்புத் தொகை கடந்த 3 ஆண்டுகளின் தேறிய இலாபத்திலிருந்து இரு ஆண்டுகளின் சராசரி இலாபத்தைக் காண்பதன் மூலம் கணிக்கவேண்டும். 1969ல் தேறிய இலாபம் 4400. 1970ல் தேறிய இலாபம் 6000. 1971ல் தேறிய இலாபம் 7600. 1972ஆம் ஆண்டுக்குரிய ஆயுளபாயக் காப்புறுதிக் கட்டணத் தொகை செலுத்தப்பட்ட போதிலும் இலாப நட்டக் கணக்கில் சேர்க்கப்படவில்லை.

வேணு விலகுவதற்குரிய மூலதனக் கணக்கையும் காப்புறுதிக் கணக்கை நான்கு முறைகளிலும் பதிவதற்குரிய வகையிலும் தயாரிக்குக.

— தொடரும்



பாடசாலை மாதிரி நாடகம் (தொடர்ச்சி)

# "சூழ்ச்சி பலித்தது!"

எம். எஸ். ஸ்ரீதயாளன்,
யாழ். அரசினர் ஆசிரிய கலாசாலை, கொழும்புத்துறை.

மந்தரை :- சிரிப்பு: அஃஹ், அஃஹ், ஹ் மகாராஜியே கைகேயி இப்போதாவது உன் உளம் இதைப் புரிந்துகொண்டதே அப்பாடா.

(படுக்கையில் இருவருமாகப் போய் அமருகின்றனர்.)

தேவராலும், மூவராலும் ஆகாததை இந்த மந்தரை செய்து முடிப்பாள்; கவலையை ஒழி. ஆனால் ஒன்றுமட்டும் ஞாபகமிருக்கட்டும். நீ என் சொற்படி நிற்பின் இந்த ஏழேழு உலகங்களையும் உன் மகன் பரதனுக்கே யாக்குவேன்.

கைகேயி :- மேலும் தாமதிக்காதே மந்தரை, உடனே சொல் உன் புத்தியை.

மந்தரை :- சொல்கிறேன் கைகேயி, சொல்கிறேன். உன் கணவன் சம்பராசுரனோடு போர்செய்தது உனக்கு ஞாபகமிருக்கிறதா?

கைகேயி :- ஆமாம் மந்தரை.

மந்தரை :- முதலில் தேவர்களோடு பொருதினான் சம்பரன். அந்தச் சம்பராசுரனுக்கு ஆற்றாத இந்திரன், உன் கணவனை உதவிக்கு அழைக்க, இந்திரனுக்குத் துணையாக உன் கணவன் அந்தச் சம்பரனுடன் போர்செய்தபோது, தசரதன் அவனால் தாக்கப்பட்டு, உடலெங்கும் காயமுற்று நினைவிழந்துகிடக்க, நீயே தேரைச் செலுத்தி மன்னனைப் போர்க்களத்திலிருந்து விடுவித்து, உடலிற்பட்ட அம்புகளை அகற்றி, தேர்ச்சாரதியாக நின்று மன்னனைப் போரில் வெற்றிபெற வைத்தாய் அல்லவா? தன் உயிரைக் காப்பாற்றியதற்காக மகிழ்ந்து உனக்கு மன்னவர் என்ன வாக்களித்தார்?

கைகேயி :- இரண்டு வரங்கள் நான் கேட்கும்போது தருவதாக உறுதியளித்தார் மந்தரை.

மந்தரை :- ஆமாம் கைகேயி; நன்று சொன்னாய். விடாதே கைகேயி. நீ விரும்பிய இரு வரங்கள் இன்னும் இருக்கவே இருக்கின்றன. இந்த வாக்குறுதியை வைத்துக்கொண்டே நம் எண்ணத்தை நிறைவேற்றிவிடலாம்.

கைகேயி :- அப்பாடா! என்னே என் தோழியின் யோசனை. நன்று நன்று. ஆமாம் மந்தரை எப்படி வரத்தைக் கேட்பது? சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மந்தரை :-** கைகேயி! அவசரப்படாதே! இதோ அதையும் சொல்கிறேன். ஒரு வரத்தால் உன் மைந்தன் பரதனுக்கு மகுடம் சூட்டிவை. மற்ற ஒரு வரத்தினால் இராமனைப் பதினான்கு வருடங்கள் காடாள அனுப்பும்படி கேள்.

(கைகேயி மந்தரையை அன்புமீதூர இன்பத்தால் கட்டித் தழுவுகிறாள். மந்தரை மேலும் சொல்கிறாள்.)

கைகேயி! உடனே செய்! போ! உறுதியாய் நில்! பாவம் பழிபார்த்து மனம் தளராதே! ஆமாம் இன்னும் சிறிது நேரத்துக்குள் இராமனின் பட்டாபிஷேகச் செய்தியோடு மகாராஜா உன்னைத்தேடி அந்தப்புரம் வருவார். அதுதான் நல்ல சந்தர்ப்பம். அப்பொழுது காரியம் தீரவேண்டும். (கைகேயி அந்த முத்துமாலையைப் பொறுக்கி யெடுத்து அன்புடன் மந்தரை கழுத்தில் அணிவிக்கிறாள்) மகாராணி! எல்லாம் வெற்றியாய் நடக்கட்டும்; நான் வருகிறேன். நாளை பரதன் அயோத்தியின் அரசன்!

இராமபிரான் காடாளப் போகிறார். ஹி! ஹி! ஹி! ஹி! இராமா நாளை உனக்கு என்ன நேருகிறது பார். ஹி! ஹி! ஹி!

(சிரித்துக்கொண்டே மந்தரை கூனிக்கூனி மேடையை விட்டகலுகிறாள்)

திரை விழுகிறது.

## காட்சி 4

இடம் :- கைகேகியின் அந்தப்புரம்.

**பாத்திரங்கள் :-** கைகேயி, தசரத மன்னன்

[கூனி போனபின் கைகேயி தன் அலங்காரங்களைக் குலைத்து, அழுத கண்ணும், சிந்திய மூக்குமாகக் கட்டிலினின்றும் இறங்கி வெறுந் தரையிலே படுத்திருக்கிறாள். தசரத மன்னன், அந்தப் புரத்தைநாடி வந்தவன் கைகேயியின் நிலையைக் கண்டு ஏங்குகிறான்]

**தசரதன் :-** கைகேயி! கண்ணே கைகேயி! என்ன கைகேயி உனக்கு என்ன நடந்தது? ஏதும் அசௌக்கியமா சொல்?

(மானை எடுக்கும் யானையைப்போல் தன் பருத்த கைகளால் அவளைத் தழுவி மன்னன் தூக்க அவள் யாதும் பேசாது மன்னனின் கைகளைத் தட்டிவிட்டு விக்கி விக்கி அழுகிறாள்)

இதென்ன அழுகை சொல் கைகேயி? என் அன்பே! இந்த ஏழு உலகத்திலும் வாழ்கின்றவர்களில் உன்னை இகழ்ந்தவர்கள் யாராக இருந்தாலும் நான் விடப்போவதில்லை. அவர்களைக் கொன்று தொலைக்கிறேன். நடந்ததென்ன கைகேயி?



**கைகேயி :-** (அழுதுகொண்டு) போங்கள்! போங்கள்!! உங்களுக்கு என்மேல் பிரியமென்பதை யாவருமறிவர். நீர் அதைச் சொல்லிக்காட்டவேண்டியதில்லை. உமக்குக் கோசலாதேவி யிருக்க இந்தக் கைகேயி ஏன்? (தேம்பி அழுதல்)

**தசரதன் :-** கைகேயி! நீ... நீ என்ன சொல்கிறாய்! என்னை வருத்தாதே. நீ சொல்வது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே. எனக்கு நீதான் என் உயிரினும் இனியவள்.

**கைகேயி :-** (இடத்தைவிட்டுச் சற்று எழுந்து) எங்கே! நீங்கள் சொல்வது உண்மையானால் எனக்களித்த வாக்குறுதியை......

**தசரதன் :-** கைகேயி! ஏன் நிறுத்திவிட்டாய். தயங்காமல் சொல் கண்ணே!

ஈகைத் தன்மையுள்ள உன் மைந்தன் இராமன்மேல் ஆணையாகச் சொல்கிறேன். நீ எதை நாடுகிறாய் கைகேயி? நீ எதைக் கேட்டாலும் அதை உளம் மகிழ்ந்து தருகிறேன். எங்கே உள் வேண்டுகோள்?

**கைகேயி :-** மன்னவா! அன்றொருநாள் நீர் சம்பராசுரனுடன் தேவேந்திரனுக்காகப் போரிட்டபோது, அவனது அம்பு ஒன்றினால் தாக்குண்டு, அறிவிழந்து விழுந்துகிடக்க, நான் உம்மைக் காப்பாற்றி, உமது தேரின் சாரதியாக நானேயிருந்து தேரோட்ட நீர் போரில் வென்றீரல்லவா? அப்போது என்னை மெச்சி தேவர்கள் சாட்சியாக, நான் கேட்கும்போது இரு வரங்கள் தருவதாக வாக்களித்தீரே அவற்றை இப்போ தரவேண்டும்.

**தசரதன் :-** (சிரிப்பு) ஹி ஹி இவ்வளவுதானே? முன்னமே கொடுத்த வரத்தை, அதுவும் தேவாதியர்கள் சமுகத்தில் கொடுத்த வாக்குறுதியை எப்படி மறப்பது தேவி? தசரதன் சொன்னசொல் மாறுமுன்னே கிழக்கில் உதிக்கும் ஞாயிறு மேற்கில் உதிக்க வேண்டும். ஞாயிறுதான் மேற்கில் உதித்தாலும் இந்தத் தசரதன் சொன்னசொல் தவறான் கைகேயி.

**கைகேயி :-** அரசே! இது சத்தியந்தானா?

**தசரதன் :-** (அவள் கையிலே தன் கையை அழுத்தி) ஆம் சத்தியமே தான்.

**கைகேயி :-** பின் மறுத்தால்......!

**தசரதன் :-** மாறேன். இது என் உயிர் - இராமன் மேலாணை!

**கைகேயி :-** ஆகா! அப்படியானால் சொல்கிறேன். அரசே! கோசல நாட்டுக்கு மன்னனாக எனது மகன் பரதன் முடிசூடவேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தசரதன் :-** (அதிர்ச்சிக்குறி) என்ன சொன்னாய் கைகேயி?

**கைகேயி :-** வேந்தரே! அவசரம் வேண்டாம். நான் இன்னும் பேசி முடியவில்லை. இதுதான் என் முதல் வரம். மற்றொன்று! சீதையின் கணவனான அந்த இராமன் நகர்நீங்கிக் காடாளவேண்டும். ஆமாம், நாளையே இராமன் அயோத்தியாபுரியை விட்டு நீங்கிச்சென்று பதினான்கு தொடர் ஆண்டுகள் வனவாசம் செய்யவேண்டும்.

**தசரதன் :-** (எதிர்பாராத இப்பேரிடியால் புத்திரவாஞ்சை மீதூர மன்னன் அடியற்ற மரம்போல வீழ்ந்து மூர்ச்சையாகிக் கிடக்கிறான். சில நிமிடங்களில் சற்று கண்விழித்து) கை...கே...யி! இது நீதான் கூறுகிறாயா? அன்றி வேறு...

**கைகேயி :-** ஆமாம்! ஆமாம்! ஆமாம்! இந்த வரங்களை நீர் தராதொழிந்தால் என் உயிர் என் உடலில் நில்லாது. இது உறுதி. சத்தியவேந்தரே! சொன்ன சொல்லை மாற்றாதீர்!

**தசரதன் :-** (சற்று எழுந்துநின்று) இதோ கைகேயி! என் தேவி! ஆத்திரப்படாதே! சற்று நிதானித்துப் பார்! என் மைந்தர் நால்வருள் இராமன் மூத்தவன், பட்டத்துக்குரியவன். உரிமை மட்டுமன்று தகுதியுமுடையவன் அவனே. எங்கள் குலகுரு வசிட்ட மகாரிஷியும், மந்திரி பிரதானிகளும், சபையோரும் தீர்மானித்த பின்பு இராமனுக்கு இதனை அறிவித்தும் விட்டோம். அயோத்தியாபுரியே நாளை அவனின் முடிபுனை விழாவை எதிர்பார்த்திருக்கிறது கைகேயி. சரி நாம் எல்லோரும்தானும் இம் முடிவை மாற்றினாலுங்கூட பரதன் சம்மதிப்பானா தேவி? பெண்ணே! தயவுசெய்து இந்த இரு வரங்களையும் விட்டு வேறு வரங்களைக் கேள். கைகேயி! என்னை வஞ்சிக்காதே என் அன்பே!

— தொடரும்


# விற்பனையாளர்கள் தேவை!

வெற்றிமணி விற்பனை செய்ய

**முற்பணம்கட்டக்கூடியவிற்பனையாளர்கள்தேவை**

பிரதிக்கு 5 சதம் கமிஷன் கொடுக்கப்படும்.

**விளம்பரம்சேகரித்துக் கொடுப்பவர்களுக்கு**

20 சத வீதக் கமிஷன் கொடுக்கப்படும்.

ஆசிரியர்





## பெருமானார் கண்ட பெண்ணுரிமை

செல்வி சுவாதா சலாகுதீன், வட்டதெனிய

மண்ணகமும் விண்ணகமும் போற்றும் இறைவனின் திருத் தூதர் அண்ணலார் நபிகள் (ஸல்) அவர்கள் தரணிவாழ் மக்களுக்கோர் அருட் கொடையாய் வந்துதித்தவர். அடிமைத் தளையை அறுத்தெறிந்து அகிலத்து மாந்தரினம் உரிமைபெறும் வழியை எடுத்தியம்பியவர். கறுப்பரும், வெள்ளையரும், கட்டையரும் நெட்டையரும், காட்டில்வாழ் வேந்தரும் இறைவன் படைப்பே என் றறைந்தவர். ஆண்டானும் அடிமையும் நாளை மஹ்ஷரிலே அன்னவனின் கட்டளைக்குப பணிந்து நடக்க வேண்டியவர்கள் என எடுத்தியம்பி மனித சமத்துவம் கண்டவர்.

இப்படியாகப் பெருமானார் கண்ட புரட்சிகள் எத்தனை எத்தனையோ! அன்று வரை உலகம் காணாத அற்புத தத்துவங்களைக் கருத்தில் கொண்டு கவலை தோய்ந்த இவ்வுலகைக் கவினுறுருவாக்கியது. அவற்றுள் ஒன்றுதான் பெண்கள் உரிமை.

''மங்கையராகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா-அந்தப் பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ இந்தப் பாரில் அறங்கள் வளருதம்மா'' என்று மங்கையரின் கைநலத்தைப் பார்த்துக் கூறுகிறார் கவிஞர் தேவி. ஆனால் இற்றைக்கு 1400 வருடங்கட்கு முன் இருந்த நிலையை எண்ணிப் பார்த்தால் ஊமையராய், குருடராய், உலகம் தூற்றும் பேதையர்களாய் தூற்றப்பட்டு வந்தார்கள் பெண்கள் குலம். அக்கால அரேபியாவின் நிலையைப் பார்த்துக் கண்ணீர் வடிக்க வேண்டியிருந்தது. அடிமைச் சந்தையிலே விலைகூறி விற்கப்பட்டனர் மாண்புமிகு பெண்கள். அவர்களின் அழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக்குத் தக்க விலைகொடுத்து வாங்கிச் சென்றனர் கனவான்கள். இவ்வாறு வாழ்விழந்த வனிதையர் பலர் வாழ்நாள் முழுவதும் வீணுகக் கழித்தனர். உயர்ந்த குடும்பங்களிலே பிறப்பது பெண்ணுக இருந்துவிட்டால் தம் அந்தஸ்துக்கு எவ்விதத்திலும் பங்கம் ஏற்பட்டு விடுமோ என அஞ்சினர் பெற்றேர். மொட்டவிழும்-முறுவல் தவழும் அக் குழந்தையின் முகத்தைப் பார்த்தபடியே சற்றும் நெஞ்சங் கலங்காது அதன் கழுத்தை நெரித்துக் கொன்றுர்கள். அல்லது ஆழக் குழியொன்று வெட்டி ஈன்றெடுத்தவளே தன் கையால் வெட்டிப் புதைத்தாள்.

மனிதப் பிறவியிலே மாண்பு இழந்த ஜன்மமாக மங்கையர் வாழ்ந்த அந்நாளிலே அவர்களுக்கு வாழ்வழிக்க முன்வந்தவர் எம் நபி (ஸல்) அவர்கள். தாரமிழந்த ஒருவன் விரும்பிய கன்னியொருத்தியை மணந்து கொள்ளக் கணவனை இழந்த காரிகை தன் வாழ்நாள் முழுவதையும் கைம்பெண்ணுகக் கழித்தாள். உணர்வின் அலையிலே அவள் உள்ளத்தில் எழுந்த உதிரக் கனலை உற்று நோக்கியோர் யாருமே இல்லை. ஆனுல் விதவா விவாகத்தைப் பிரகடனம் செய்து தன் வாழ்வில் செய்துங்காட்டினுர். தன்னை விரும்பிப் பொன்னும் பொருளும் குவிக்கக் காத்திருந்த அரசிளங் குமரிகளை யெல்லாம் விட்டுவிட்டு தன்னிலும் பதினைந்து வயது கூடிய கதீசாப் பிராட்டியைக் கடிமணம்செய்தார். கதீஜா முதிர்ந்தவள் மட்டுமல்ல. விவாகமாகி ஒரு குழந்தைக்குத் தாயுமானவள். அப்படியிருந்தும் அன்னவரை இல்லத் துணைவியாக ஏற்றுக் கொண்ட பெண்ணினம் மறக்கமுடியாத பெருவாழ்வு இதுவேயாகும்.

பெண் இனத்திற்கே பெருமை யளிக்கும் வகையில் சொத்துரிமை, சுதந்திர உரிமை என்பன வழங்கிப் பெண்களைப் பெருமைப்படுத்தினுர். ''மாதாவின் பாதத்தடியிலே சுவர்க்கம்'' என மகிழ்வுறக் கூறினுர். தனது அருமை மகள் பாத்திமாவைத் திருமணம் செய்து வைக்க நினைக்கிறேன் உன் விருப்பம் என்ன? எனவும் வினவினுர். சிந்தித்துச் செயலாற்ற முனைந்த அறிவுப் பெருங்கடல் முடிவைத் தன் மகளிடம் கேட்டறிய முனைந்தார் என்றுல் பெண் குலத்திற்கு இவர் வழங்கிய பெருமைதான் என்னே! எண்ணத்திற்குச் சுதந்திரம் வழங்கிய ஏந்தல் நபி குற்றம் கண்டபோது சுட்டிக் காட்டவும் தவறவில்லை.



''வீட்டலுவல் பார்ப்பதற்கோர் வேலையாள் கேட்டதற்கு நாட்டை ஆளும் நல்ல தந்தை நாட்டமற்றுர் பாத்திமா'' என்று எடுத்துக் கூறியுள்ளார். பெண்களுக்கு வாழ்வளித்த அவர் அவர்களின் கடமையை எடுத்துக் காட்டவும் தவறவில்லை என்பதைக் கவிதைமூலமே அறிகிறேம். பெண்கள் ஏட்டையும் தொடுவது தீது எனக் கூறியும் ஆண், பெண் இருபாலார் மீதும் கல்வி கற்பது கடமை என எடுத்துரைத்தார் எம் மாநபி.

இஸ்லாத்தில் அண்ணலார் போதித்த அறநெறியிலே மறை கூறும் நெறி வழியிலே நின்று ஒழுகவேண்டிய நம் இஸ்லாம் சமூகம் இன்றுள்ள நிலையைப் பார்த்து எள்ளி நகையாடத்தக்கது. கட்டிளம் காளையர் மேடையிலே ஏறிக் கோடை மழைபெய்வர் சீதனம் வேண்டாமென்று. ஆனுல் விவாகக் சந்தையிலோ வாய்மூடி மௌனியாவார். அவரின் பெறுமதியோ வேறு எனவே மங்கையர்க்கு வாழ்வழித்து, நங்கையர்க்கு நீதி தந்த நன்நபி, வழியிலே நாமும் செல்வோமாக.

✶✶

# இளமையும் வறுமையும்

சிவா ஞானசூரியம்

''கொடியது கொடியது வறுமை; அதனிலும் கொடியது இளமையில் வறுமை'' என்ற முதுமொழிக்கிணங்க, இன்று எத்தனை எத்தனையோ பல்லாயிரக் கணக்கான இளம் உள்ளங்கள் வறுமை என்னும் துர்ப்பாக்கிய நிலையால் கட்டுண்டு காயப்பட்டு உள்ளத்தின் இனிய இலட்சியங்களுக்கு-இன்ப நோக்கங்களுக்கு இடையூறு விளைவித்து தங்களைத் தங்களுக்காகவே தியாகம் செய்து தவிக்கின்ற பரிதாப நிலை தற்கால சமுதாய அமைப்பில் மேலோங்கி நிற்பது பட்டவர்த்தனமாக நம் கண்களுக்குப் புலப்படுத்துகின்றது. இளமை என்பது மானிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் அளவிட முடியாத — விலைமதிப்பற்ற காலப் பிரிவாகும். இந்தக் காலப் பிரிவும், அதற்குள் நிகழ்கின்ற சம்பவங்களும்தான் ஏன் மானிடராகப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்ற உன்னத உண்மையை உலகுக்கு உணர்த்துவதற்கேற்ற உயர்ந்த சான்றாகும். இதற்கு மாறாக வறுமை என்பது — அதனிலும் இளமையில் வறுமையென்பது மாதவத்தினால் இரந்து பெற்ற — உலகியற் பிறப்புகளிலெல்லாம் தலைசிறந்ததும் அதி உயர்ந்ததுமான, மானிட அவதாரம் என்று கூறப்படுகின்ற நறுமணப் பூங்காவை அனற்பொறிக்கும் அசுரப் பிடியாம் கொடிய வெப்பத்தால் கொள்ளைகொண்டு, கொலைசெய்யும் வரட்சி என்னும் கோடையை ஒத்ததாகும்.

அதன் ஆக்கிரமிப்புக்கு ஆளாகிய எந்தவொரு மரம், செடி, கொடியும் எப்படித தங்கள் சுயதன்மையில் மாற்றம் பிரதிபலிக்கின்றனவோ அப்படியேதான் இளமையில் வறுமையால் சூடுபட்டுச் சுழன்ற அத்தனை இதயங்களும் அவற்றின் தளிம்புகளை நெஞ்சத்தின் நினைவுகளோடு பின்னிப் புணைத்து வைத்திருக்கின்றன. கோடை மாறி, மாரி வந்தால் தோட்டத்துப் பயிர்களோ அல்லது மரங்களோ தங்கள் சுயதன்மையை அல்லது அதைவிடச் சிறந்த தன்மையை அடையக்கூடும். ஆனால் இளமையில் வறுமையின் அஜராகப் போக்குக்கும், ஆக்கிரமிப்புக்கும் ஆளாகிய மானிட ஜன்மங்கள் இளமையும், அதன் உத்வேகத் துடிப்பும் நிறைந்த காலங்கள் கடந்த பின், எத்தனையோ வகையான பேரின்ப வாழ்வு என்னும் பிருந்தாவனம் வாவென்று வரவேற்று வளைகரத்தால் அணைத்தெடுத்து முத்தமிட்டு மகிழ்ச்சிசொரிந்தாலும், வாடிய இதயங்கள் அவற்றின் வளம்கொழிக்கும் இளமைத் துடிப்பையோ, இதமான சுகத்தையோ ஈண்டும் பெற்றுவிடப் போவதில்லை. மாறாக, கடந்து சென்ற இளமையும், அதன் இங்கித நினைவுகளும், வேட்கைகளும் விரையமாய்ப் போய்விட்டனவே! வீணே மடிந்துவிட்டனவே! என்ற வேதனை எனும் தீயதனாலே வெந்து வெந்து விரக்தி அடைகின்றன.

இளமைக் காலத்தின் நியாயபூர்வமான ஆசைகளை



யும், தேவைகளையும் பூர்த்தி செய்திராத எந்த இதயங்களும் இளமை கழிந்த பின்னர் எப்படிப்பட்ட சுகபோகங்களும், சொர்க்க போக வாழ்வுகளும் அவைகளைவலிய வந்து மண்டியிட்டு வணங்கி நின்றாலும், மனப்பூர்வமாக அள்ளி எடுத்து மனம் திறந்து சுகிர்க்கப்போவதில்லை. சில இதயங்கள் அப்படி சுகிர்த்து மகிழ முனைந்தாலும், இளமையிற்பட்ட இடிமுழக்க அதிர்ச்சியாம் வறுமையின் தாக்கம் இதயத்தின் ஓர் கோணத்திலிருந்து உறுத்திக் கொண்டேதான் இருக்கும். அடுத்த நிமிடத்தில் அத்தனை இன்ப வாய்ப்புகளும் எட்டிக் காய்தான். எண்ணிப் பார்க்க இதயமே மறுத்துவிடும்.

இளமை மானுட வாழ்வில் ஓரேயொரு முறைதான் வரும். ஆனால், வறுமை எண்ணிறந்த வேளைகளிலெல்லாம் வரும், போகும். அதற்கு அத்தனை வலிமையுண்டு. இளமைக்கோ அப்படி நியதியில்லை. அது பூப்பதும், காய்ப்பதும், பழுப்பதும் ஒரேமுறைதான். அந்த ஒரேயொரு முறையை நாம் கைநழுவ விட்டுவிடாமல், பூக்கின்ற பூவையும், அதன் கவர்ச்சியையும், கண்ணைப் பறிக்கும் கொள்ளை அழகையும் பலப்பல கோணங்களில் ஓவியமாக வடித்தும் அல்லது புகைப்படமாக எடுத்தும், தொட்டு மகிழ்ந்தும், சுகந்தத்தை நுகர்ந்தும், காயாகிவிட்டதும், கண்ணியமுடனும், கவனத்துடனும் காத்தும், பழம் என்னும் பரிபக்குவம் அடைந்த பின்னர், அதைக் களிப்புடன் கையில் பவ்வியமாய்ப் பறித்தெடுத்து தோழருடன் உண்டும் மகிழ்ந்தாற்றான் அதன் உயர்ந்த தன்மையையும், சுவையையும், பலனையும் உன்னியுன்னி மகிழவும் முடியும்; உளநிறைவு கொள்ளவும் முடியும். அதற்கு மாறாக அந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால், அதன் பிரிவுத்துயரை எஞ்சிய நாட்கள் முழுவதும் நிச்சயமாய் எண்ணியெண்ணி ஏங்கத்தான் வேண்டும். என்றுமே அமைதி கிட்டாது. பசிக்கின்ற வேளையில்தான் புசிக்க வேண்டும். அப்போதுதான் பசிக்கின்ற காரணமும் புசிக்கின்ற காரணமும் புரியும். அதைவிடுத்து பசி தணிந்த பின் புசிபுசி என்று பாலும் பழமுமாக அள்ளியள்ளித் தந்தால்தானும் அவற்றிற்கு அரைக்காசுகூடப் பெறுமதியில்லையே. அதைப்போலத்தான் இளமை இருக்கின்ற வரையில்தான் இன்பத்தை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதய சுத்தியோடு அனுபவிக்கவும், எண்ணங்களை ஈடேற்றவும் முடியும். மனித சிருஷ்டியின் வரைவிலக்கணமும் தெற்றெனத் துலங்கும். அப்படியல்லாது வறுமையால் இளமை சிறந்து எண்ணங்களும் ஏக்கங்களும் குமைந்து குறுகியபின், எழிலான வாழ்வு ஒயிலாக வந்து மயிலாக ஆடினுலும், அது கொடும் வெயிலாகவும் குத்துவாளாகவுமே காட்சியளிக்கும்.

தள்ளாத வயதிலும் கள்ளாக எம்மை மயக்குகின்ற மகிழ்விக்கின்ற இனிய நினைவுகள் எதுவெனில் இளமைப் பருவமும் அதன் எகிறிக் குதித்த உணர்ச்சிகளுமே யாகும். இளமை மங்கி மடிந்து சிதைந்தபின் முதுமை ஒளிர்ந்தென்ன? ஓடிந்தென்ன? உண்மையிலே, இந்த வறுமை இருக்கே, அது ஒரு சுயநலவாதி. அது எம்மை ஆழ்கின்ற போதும் அருவருக்கும். ஆண்டுவிட்ட பின்னரும் அருவருக்கும். ஆனுல், இளமை இருக்கே அது எம்மை அணைக்கின்ற போதும் இன்பமும் துன்பமும் குதூகலமும் இதயங்களை நிறைக்கும். அணைந்துவிட்ட பின்னரும் அதன் நினைவுகள் எமக்குப் பெருமையையும் புகழ்ச்சியையும் ஊட்டும். அதோடு பிறவிப் பயனின் பேரின்ப நிலையையும் உணர்த்தும். ஆகவே இந்த வறுமை கொடியது. அதனிலும் கொடியது இளமையில் வறுமை. மானிட வாழ்வில் இரண்டும் இணைந்து வரவே கூடாது. ஆன்மாக்களுக்கு மாயை எப்படியோ அப்படியேதான் இளமைக்கும் இலட்சியங்களுக்கும் இந்த வறுமை.

---

17 தொடக்கம் 25 வரையுள்ள எண்களை 3 நிரைகளில் அமைத்து எப்பக்கம் கூட்டினாலும் 63 வரச் செய்ய முடியுமா?

| | | |
|---|---|---|
| 18 | 23 | 22 |
| 25 | 21 | 17 |
| 20 | 19 | 24 |




## கடமை செய்வோம்!

வளலாயூர் செ. சிவசம்பு

ஊக்கமுடன் உழைத்திடுவோம்
உயர்வுகளை அடைந்திடுவோம்
ஆக்கம் பெருக்கிடவே
முதலிட்டுத் தொழில்புரிவோம்
தேக்கும் பொருளாலே
நாட்டிற்கு நன்மையில்லை
ஏக்கம் துடைத்திடுவோம்
ஈட்டும் பொருளாலே!

வாட்டும் வறுமையினை
நாட்டைவிட் டோட்டிடவே
காட்டைக் களனிசெய்து
களஞ்சியத்தில் நெல்குவிப்போம்
கூட்டுப் பணிபுரிந்தே
நாட்டுக்கு ழைத்திடுவோம்
ஈட்டும் பொருளாலே
இயக்கிடுவோம் ஆலைகளை!

நூலைப் பதித்திடுவோம்
நுண்ணறிவைப் புகட்டிடுவோம்
ஆலை அமைத்திடுவோம்
அனைவருக்கும் தொழில்தருவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலை அமைத்திடுவோம்
செய்பொருளை விற்றிடுவோம்
வேலை யில்லாப்பிரச்சினையை
நாட்டை விட்டுவிரட்டிடுவோம்!

கடமைகளைச் செய்திடுவோம்
கண்ணியத்தைக் காத்திடுவோம்
மடமைகளைக் கொழுத்திடுவோம்
மானிடத்தைப் போற்றிடுவோம்
உடமைகளைப் பகிர்ந்தளிப்போம்
உத்தமராய் வாழ்ந்திடுவோம்
திடமுடனே பணிபுரிவோம்
தீமைகளை மாய்த்திடுவோம்!

கொலைவெறியை ஒழித்திடுவோம்
குண்டுகளை அழித்திடுவோம்
நிலைதவறும் மக்களுக்கும்
நேர்நெறியைக் காட்டிடுவோம்
புலையொழுக்கம் தவிர்த்திடுவோம்
புன்மைகளை நீக்கிடுவோம்
கலைசிறக்கப் பணிபுரிவோம்
காவியங்கள் படைத்திடுவோம்!

பாசம் வளர்த்திடுவோம்
பதவிவெறி ஒழித்திடுவோம்
நாசம் தவிர்த்திடுவோம்
நன்மைகளைப் பெருக்கிடுவோம்
நேசம் நிலைபெறவே
நல்லுறவைப் பேணிடுவோம்
தேசம் சிறப்படையத்
தொண்டுகளைச் செய்திடுவோம்!

# சள்ளையைத் தாங்கோம்

சள்ளையைத் தாங்கிட மாட்டோம் — அம்மா
தாயே உன் சேயையடக்காய் — அவன்
பிள்ளையில்லை பெருச்சாளி — எங்கள்
பிள்ளைகள் கெட்டனர் தோழி!

அச்சமில்லை யென்று வருவான் — எங்கள்
அம்பிப்பயல் துணை பெறுவான் — உடன்
பட்சணப் பானைகள் காலி — வீட்டுப்
பண்டங்களுக் கில்லை வேலி

பூசைக் கடவுளுருவைத் — தெருப்
புழுதியிலே கட்டி யிழுப்பான்
மேசை நாற்காலி போட்டிருந்தே —எங்கள்
வீட்டினைக் கோர்ட்டெனச் செய்வான்

முத்தமிழ் நூல்களைச் சொன்னால் — எல்லாம்
முப்ப தெழுத்தெனச் சொல்வான்
கத்தை படித்தவர் முன்னே — கவிக்
கம்பனைக் கப்பல் விடுவான்.

— கவியோகி சுத்தானந்தபாரதியார்

## சந்தா விண்ணப்பப் பத்திரம்

நிர்வாகி,
வெற்றிமணி.

கீழ்வரும் முகவரிக்கு 197 ... ஆம் ஆண்டு ........................ மாதம் தொடக்கம் வெற்றிமணியை அனுப்பிவைக்கவும். வருட சந்தா ரூபா ஐந்து இத்துடன் அனுப்பப்படுகின்றது.

முகவரி : ................................................

விலாசம் : ................................................

................................................
கையொப்பம்

பணம் அனுப்பவேண்டிய முகவரி :
பொன். இராசரத்தினம்,
சக்தி அச்சகம், ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது


நங்கையர் விரும்பும் நவநாகரீக

✳ நகைகளுக்கும் ✳ வைரங்களுக்கும்

புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

கே. என். எம்.

# மீரான் சாஹிப்

— தங்கப்பவுண் நகைமாளிகை —

கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்.

# K. N. M. Meeran Sahib

JEWELLERS & DIAMOND MERCHANT

— SOVEREIGN PALACE —

Kannathiddy, *Dial:* 585 JAFFNA.



# திருக்குறள்

இலங்கைக்கு முதன்முதலாக நீல சோப்பை

அறிமுகப்படுத்தியவர்கள்

மில்க்வைற் ஸ்தாபனத்தாரே.

1-7-72 தொடக்கம்

மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில்

திருக்குறள் அச்சிட்டு வெளிவருகின்றது.

மேலுறைகளைச் சேகரித்து,

பரிசுத் திட்டத்தில் பங்குபற்றுங்கள்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை

தபாற் பெட்டி இல. 77

யாழ்ப்பாணம்.


இப் பிரசுரம், சக்தி அச்சகத்தினருக்காக, யாழ். ஸ்ரான்லி வீதியி லுள்ள சக்தி அச்சகத்தில், பொன். இராசரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org